**கற்றலின் குறைபாடு எனப்படும் பிரச்னையானது மூளை எவ்வாறு விடயங்களை கிரகித்துக்கொள்கிறது, அவற்றை எவ்வாறு அமைக்கிறது, புரிந்து கொள்கிறது அல்லது தகவல்களை எவ்வாறு பயன்படுத்துகிறது என்பதைப்பொருத்ததாகும்..**

## மேலும் விவரங்கள்

### கற்றலின் குறைபாடு:

- இது சராசரியான அல்லது சராசரிக்கும் கூடுதலான அறிவு கொண்டவர்களுக்கு ஏற்படும்.

- இது கீழே கண்ட அனைத்திலுமோ அல்லது ஏதாவது ஒன்றிலோ பாதிப்பை ஏற்படுத்தும்:
  - வாசித்தல்
  - பேசுவது
  - புரிந்துகொள்ளுதல்
  - எழுதுதல்
  - கணிதம்
  - முறையாக அமைப்பது
  - சமூகரீதியான தகவல்தொடர்புகள்

- கற்றலின் குறைபாடுகள் *வெளியே தெரியாது* (ஒருவரைப்பார்த்த உடன் அவருக்கு கற்றலின் குறைபாடு உள்ளதா என தெரிந்து கொள்ள இயலாது)

- சனத்தொகையில் 5-8% சதவீதத்தினருக்கு கற்றலின் குறைபாடு உள்ளது.



### கற்றலின் குறைபாடு உள்ளவர்களும் வெற்றியை அடையலாம்:

- அவர்களுக்கு எது கடினமாக உள்ளது என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளும்போது
- அவர்களால் எதை நன்றாகச்செய்ய இயலும் என்பதை அவர்கள் உணரும்போது
- அவர்கள் அதற்கு ஏற்ற திறமைகளை வளர்த்துக்கொண்டால்
- அவர்களுக்கு எது உதவியாகஉள்ளது என்பதை அவர்கள் தெரிந்துகொண்டால்
- அவர்கள் உதவி கேட்கும் நேரத்தில் அவர்களுக்கு உதவி கிடைத்தால்



**கற்றலின் குறைபாடு இருப்பதைத்தவிரவும் பிள்ளைகளுக்கு கற்றுக்கொள்வதில் கடினம், நடத்தை அல்லது பாடசாலைக்குச் செல்வது போன்ற மற்ற காரணங்களிலும் பிரச்னைகள் ஏற்படலாம்**

### அவற்றில் சில விடயங்களாவன:

- ஏமாற்றம், பதட்டம், கவலை மற்றும் பயம் போன்ற உணர்வுகள்
- மருத்துவ காரணங்கள், சுகமின்மையாக, பசியாக, சோர்வாக உணர்வது
- வீட்டில் பிரச்னைகள் அல்லது நண்பர்களுடன் பிரச்னைகள்
- கவனம் செலுத்துவதில் பிரச்னை அல்லது கவனம் சிதறுவதுபோல தோன்றுவது
- மருந்துகள், போதைப் பொருள் அல்லது மது பானங்களை உட்கொள்வது



### தங்கள் பிள்ளைகளுக்கு உதவ பெற்றவர்கள் என்ன செய்யலாம்:



- அவர்கள் தேவைப்படும் நேரத்தில் தங்களுக்கான ஆதரவை சமூகசேவை நிறுவனங்கள் வாயிலாகவும் மற்றும் பிற பெற்றோர்கள் மூலமாகவும் பெறுதல் (தனிப்பட்ட முறையிலோ அல்லது ஆதரவுக்குழுக்கள் வாயிலாகவோ)
- பாடசாலையில் தனிப்பட்ட சிறப்பு பயிற்றுவித்தல் சேவைகள் குறித்து அறிவது
- கற்றலின் குறைபாடு உள்ள பிள்ளைகளுக்கு பாடசாலையில் இடம் கிடைக்கவும் மற்றும் உதவிகள் கிடைக்கப்பெறுவதற்குமான அவர்களது சட்டப்படியான உரிமைகளை புரிந்துகொள்ளுதல்.
- கல்வி கற்பதை திட்டமிடுவதில் பின்வரும் வகையில் பங்குபற்றுதல்:
  - முடிவு எடுப்பது யார் என்பதை தெரிந்துவைத்துக்கொள்வது
  - புடசாலை, வைத்தியர்கள் போன்றவர்களிடமிருந்து வரும் அறிக்கைகளை வைத்துக்கொள்வது.
  - கற்றலின் குறைபாடு பற்றிய தகவல்களை அறிந்து கொள்வது மற்றும் உங்கள் பிள்ளை குறித்தும் தெரிந்து கொள்வது
  - தங்கள் பிள்ளையின் பலம் மற்றும் ஆர்வம் பற்றி அவர்களது பாடசாலையுடன் பகிர்ந்து கொள்வது
  - ஒரு தீர்வு காணப்படவேண்டும் என்கிற அவசியத்தை வலியுறுத்துதல்



பின்பக்கம் பார்க்க →

- அவர்களது பிள்ளையை ஈடுபடுத்துதல்: மகன்/மகள் தனக்குரியவற்றை கேட்டுப்பெறும் திறமைகளை வளர்த்துக்கொள்ள உதவுதல்
- தங்களது பிள்ளைகளின் கற்றலின் குறைபாடு பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் அறிந்து கொள்வது
- மகன்/மகள் தங்களது கற்றலின் குறைபாடு பற்றி அறிந்து கொள்ள உதவுதல்
- தங்களது மகன்/மகள் அவர்களுக்கு எவற்றில் பலம் அல்லது திறமை உள்ளது என்பதை கண்டறிய உதவுதல்
- எவற்றை அவர்கள் நன்றாகச்செய்கிறார்களோ அந்த திறன்களை தொடர்ந்து அதிகரித்துக்கொள்ள உதவுவது
- தங்களது பிள்ளையின் வளர்ச்சி மற்றும் கற்பதை ஊக்கப்படுத்துவது, அவை மற்ற பிள்ளைகளைவிடவும் தாமதமாக இருந்தால்கூட
- பிள்ளையின் கற்றலின் குறைபாடு எந்த அளவில் உள்ளது மற்றும் எவ்விதம் உள்ளது என்பதை கருத்தில் எடுத்துக்கொண்டு அதற்கு தகுந்த வகையில் அவரிடம் தாங்கள் எதிர்பார்ப்பதை மாற்றியமைத்துக்கொள்வது
- பாடசாலையில் அல்லது சக பிள்ளைகளுடன் ஏற்படும் பிரச்னையான அனுபவங்களை பிள்ளை தெரிவிப்பதற்கு ஊக்கம் தருவது
- கற்றலின் குறைபாடு உள்ள பிள்ளைகளிடம் வெற்றியடைவது சாத்தியம்தான் என்ற செய்தியை தெரிவிப்பதில் கவனம் தேவை
- திறமைகளை வளர்த்துக்கொள்ளும் பயிற்சிகளுக்கு ஊக்கப்படுத்துதல்
- அவர்களது கடின உழைப்பு மற்றும் முயற்சிகளுக்கு உண்மையாக பாராட்டுதலை தெரிவிக்கவேண்டும்



**பாடசாலை, சமூகசேவை நிறுவனம் அல்லது குடும்ப மருத்துவர் ஆகியோரிடம் பேசவேண்டும்:**

- பிள்ளை/வாலிபவயதுடையோர் துன்புறுத்தலுக்கு ஆளானால்
- பாடசாலையில் கற்பிக்கப்படுபவை அவன்/அவள் தேவைகளுக்கு ஏற்றவகையில் இல்லாவிட்டால்



- பிள்ளை/வாலிபவயதுடையோருக்கு வீட்டுப்பாடம் செய்வதில் உதவி தேவைப்பட்டால்
- பிள்ளை/வாலிப வயதினருக்கு மனரீதியான ஆதரவு தேவைப்பட்டால் (மனஅழுத்தம், பதட்டம், தன்னைத்தானே துன்புறுத்திக்கொள்ளும் மனோநிலை போன்ற காரணங்களால்)

## கற்றலின் குறைபாடு உள்ள நிலைக்கு உதவிகளைத்தரும் சமூகவேவை நிறுவனங்கள்

**Integra**
416-486-8055
info@integra.on.ca
www.integra.on.ca
25 Imperial Street, 4TH Floor
Toronto, ON   M5P1B9

INTEGRA

**Learning disAbilities Association of Toronto District**
416-229-1680 or 416-229-9046
admin@ldatd.on.ca
www.ldatd.on.ca
121 Willowdale Ave.
# 203
Toronto, ON   M2N 6A3

Learning disAbilities Associations
Toronto District Chapter

The Integra Resource Centre

# கற்றலின் குறைபாடு என்றால் என்ன?

**பிள்ளைகள் & இளம்வயதினருக்கு உதவி**



THE ONTARIO TRILLIUM FOUNDATION
LA FONDATION TRILLIUM DE L'ONTARIO